# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**STC.No.560/2021** **DATE:30.08.2024**

எ.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயன் | Father's Name | : ரங்கசாமி |
| District | : சேலம் | Taluk | : சேலம் |
| Village | : அழகாபுரம் | Calling | : - |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்)

<u>குவிமுச 91-ன் கீழ் விசாரணை :</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், அழகாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். இவ்வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். அவரிடம் இருந்து 15-10-2020 ம் தேதி, நான் TN 30 R 4429 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை ரூ.5,50,000/-ம் தொகைக்கு வாங்கியுள்ளேன். அதற்கென நானும், புகார்தாரரும் ஏற்படுத்திகொண்ட ஒப்பந்தத்தின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

2) மேலும், TN 30 R 4429 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை நான் கடந்த 27-06-2023 ம் தேதி, **ஸ்ரீ** மகாலட்சுமி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திடம் ரூ.3,00,000/-ம் தொகைக்கு விற்றுவிட்டேன். அதற்கென நானும், **ஸ்ரீ** மகாலட்சுமி டிரேடர்ஸ் என்ற நிறுவனமும்

ஏற்படுத்திகொண்ட ஒப்பந்தத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். ஆகையால், TN 30 R 4429 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியின் பதிவு சான்றிதழையும் நான் **ஸ்ரீ** மகாலட்சுமி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட்டதால் அதன் அசல் என்னிடம் இல்லை. ஆகையால், பதிவு சான்றிதழின் நகலை நான் தற்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**DEPOSITION OF WITNESS**

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**STC.No.560/2021** **DATE:30.08.2024**

புகார்தாரர்

| | | | |
|---|---|---|---|
| Name | : பரிமளா | Husband's Name | : முருகேசன் |
| District | : | Taluk | : |
| Village | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.08.2024.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்)**

**குவிமுச 91-ன் கீழ் விசாரணை :**

1) நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் இந்த வழக்கில் எதிரி தரப்பில் குவிமுச 91-ன் கீழ் தாக்கல் செய்த மனுவின் பேரில் TN 30 R 4429 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியின் பதிவு சான்றிதழின் நகலையும், விற்பனை ஒப்பந்தத்தையும் நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.